**செய்தி வெளியீடு எண்: 209** **நாள்: 12.03.2020**

**தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

**செய்தி வெளியீடு**

# அமைச்சர்கள் முன்னிலையில் அகராதி விழா! ஆயிரக்கணக்கான மாணவர்கள், அறிஞர்கள் பங்கேற்பு!

- **தூய தமிழ்ப் பற்றாளர்களுக்குப் பரிசு!**
- **65 ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளடக்கிய ஆய்வு மலர் வெளியீடு!**
- **கல்லூரிகள்தோறும் 'சொற்குவை மாணவத் தூதுவர்' நியமனம்!**
- **4,385 கலைச்சொற்கள் வெளியீடு!**
- **பன்னாட்டுக் கருத்தரங்கம்!**
- **உலகப்புகழ் 'நாட்டிய ஒளி' கனடா மேரி இளங்கோவனின் தமிழிசை நாட்டியம்!**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், 11.03.2020 புதன்கிழமையன்று தமிழ் அகராதியியல்நாள் நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அமைச்சர்களால் தூயதமிழ்ப் பற்றாளர்கள் மூவருக்குப் பரிசுத்தொகை வழங்கப்பட்டதோடு, சொற்குவை மாணவத் தூதுவர்களுக்கான நியமன மடல்களும் வழங்கப்பட்டன. மேலும் அகராதி ஆய்வு மலர் வெளியிடப்பட்டதோடு, அரசாணை பெறுவதற்காக **4385 தமிழ்க் கலைச்சொற்கள்** அடங்கிய குறுந்தகடும் வெளியிடப்பட்டது.

கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக அரங்கில் தமிழ் அகராதியியல்நாள் நிறைவு விழா காலை 9.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில் **தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறையின் அரசு செயலாளர் திரு.மகேசன் காசிராஜன்** வரவேற்புரை வழங்கிப் பேசுகையில், இன்றைய கணினிக் காலத்திற்கேற்றவாறு தமிழிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஒன்றுதிரட்டி ஒரே தளத்தில் அமைத்துச் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றி உலக மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கும் பணியையும், அகராதி உருவாக்கம் என்னும் நுட்பமான அறிவுப்பணியையும் அகரமுதலி இயக்ககம் சிறப்பாகச் செய்துவருவதாகத் தெரிவித்தார்.

**தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள்** பங்கேற்று, சொற்குவை மாணவத் தூதுவர்களுக்கான நியமன மடல்களை வழங்கித் தலைமையுரையாற்றுகையில், மொழிக்கு அடிப்படை சொற்கள் என்பதால் தமிழிலுள்ள எல்லாச் சொற்களையும் பாதுகாப்பதற்குச் சொற்குவைத் திட்டம்

செயற்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவித்தார். ஆங்கிலத்தைவிட தமிழில் 3 மடங்கு சொற்கள் அதிகம் உள்ளன என்றும், நாள்தோறும் பலதுறைகள் புதிதுபுதிதாக வளர்ந்துவரும் இன்றைய காலத்தில், பிறதுறை சார்ந்த சொற்களுக்கு அவை உருவான ஒருமாத காலத்திற்குள் தமிழில் சொற்களை உருவாக்கி மக்களின் பயன்பாட்டுக்குக்கொண்டு செல்ல சொற்குவை பயன்படும் என்றும் தெரிவித்தார். காலத்திற்கேற்ப புதிய கலைச்சொற்களை உருவாக்கி இணைப்பதே மொழியை இளமையாக வைத்திருக்க வழிவகுக்கும் என்றும், மாணவர்கள் தங்கள் தேவைக்காகப் புதிதாகக் கண்டறியும் சொற்களையும் ஆய்ந்து இதுவும் தமிழ்தான் என்று அங்கீகாரம் அளிக்கவும், வட்டார மொழிகளுக்கு அங்கீகாரம் அளிக்கவும் சொற்குவை உதவும் என்றும் தெரிவித்தார். மொழிகள் பிரிந்துசெல்வதற்கான முக்கிய வாயிலாக அமைவது வட்டார வழக்குச் சொற்களே என்று கூறிய **அமைச்சர் திரு.க.பாண்டியராஜன்,** வட்டார மொழிகளையும் சொற்குவையில் இணைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

மொழி வாழ்ந்தால்தான் பண்பாடும் இனமும் வாழும் என்று தெரிவித்த அமைச்சர், தமிழின் சொல்வளத்தைப் பெருக்கி, **யுனெஸ்கோ வெளியிட்டுள்ள உலகின் மதிப்புவாய்ந்த மொழிகளின் பட்டியலில் 14ஆம் இடத்திலுள்ள தமிழை 10ஆம் இடத்திற்கு முன்னேற்ற சொற்குவை, தமிழ்வளர் மன்றங்கள், தமிழ்ப்பண்பாட்டு மையங்கள் போன்றவை பயன்படும் என்றும் தெரிவித்தார்.**

## அகராதி ஆய்வு மலர்:

விழாவில் அகராதி வல்லுநர்களின் செறிவார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய **அகராதி ஆய்வு மலரை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் வெளியிட மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ்அவர்கள் பெற்றுக்கொண்டார்.**

## சொற்களைப் பயன்கொள்ள வேண்டும்:

விழாவில் **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள்** கலைநிகழ்ச்சி நடத்திய கல்லூரி மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி ஊக்கவுரையாற்றுகையில், மொழிதான் ஒருவரின் அடையாளம் என்றும் மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும் என்றும் எனவே மொழியைக் காக்க ஒவ்வொருவருக்கும் அக்கறை வேண்டும் என்றும் தெரிவித்தார். ஒவ்வொருவரும் தங்களுடைய அனைத்துச் செயற்பாடுகளிலும் தாய்மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்றும், பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறினார். ஒருமொழியிலுள்ள சொற்களைத் தொகுத்து
வகைப்படுத்தி அதைக் கருவூலமாக்கிக் காப்பது அகராதித்துறைதான் என்று கூறிய அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள், நெல்மணிகளைக் களஞ்சியத்தில் காத்து வைத்தால் மட்டும்

போதாது அதைச் சமைத்து உணவாக்கி உண்டு மகிழ வேண்டும்.அதைப்போல அகரமுதலித்துறை சொற்களைத் தொகுத்து வைத்திருந்தால் மட்டும் போதாது நாம் அனைவரும் அந்தச் சொற்களைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

## 4385 கலைச்சொற்கள்:

விழாவில், அகரமுதலி இயக்ககத்தில் இயங்கும் தமிழ்க்கலைக்கழகத்தின் சார்பில் வடிவமைக்கப்பட்ட **4385 புதிய தமிழ்க்கலைச்சொற்கள் அரசாணைக்கான குறுந்தகடு வெளியிடப்பட்டது.** தமிழ்க்கலைச்சொற்கள் அடங்கிய குறுந்தகட்டை **அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் வெளியிட தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறையின் அரசு செயலாளர் திரு.மகேசன் காசிராஜன் அவர்கள்** பெற்றுக்கொண்டார். தமிழ்க்கலைக்கழகத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் திரு.கு.பாலசுப்பிரமணியன், திரு.இரா.கு.ஆல்துரை, புலவர் வெற்றியழகன், திரு.நா.சு.சிதம்பரம், திரு.அ.மதிவாணன் ஆகியோருக்கு அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்.

## பயிற்சி மாணவர்கள்:

விழாவில் **தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் மருத்துவர் சுதாசேஷையன்** அவர்கள், அகரமுதலி இயக்ககத்தில் சொல்லாக்கப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி மகிழ்வுரையாற்றுகையில், சொற்குவைத் திட்டமானது பலதுறை அறிஞர்கள் கலந்து ஆலோசிக்கவும் அதன்மூலம் சொற்களை எளிதாகக் கையாளவும் உதவுகிறது என்று தெரிவித்தார்.மேலும் ஒருசொல் எங்கிருந்து உருவாகிறது என்பதைப் புரிந்துகொள்வும் அதனால் மொழியை மருவின்றிப் பயன்படுத்தவும் சொற்குவை உதவுகிறது என்று தெரிவித்தார். மேலும், சொற்களைப் பொதுமைப்படுத்தவும் எளிமையாக்கி மக்களிடம் கொண்டுசேர்க்கவும் சொற்குவை உதவுகிறது என்று தெரிவித்தார்.

## புலமையைவிட புரிதல் முக்கியம்:

**தொல்லியல்துறை முதன்மைச்செயலாளரும் ஆணையருமான திரு த.உதயச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள்** தாம் வழங்கிய வாழ்த்துரையில், மக்கள் மொழியை உயிர்ப்போடு அணுக வேண்டுமென்றால் அதற்காக நாம் அணுகவேண்டிய நூல் தொல்காப்பியம் என்றும், தொல்காப்பியத்தில்தான் முதன்முதலில் அகராதிக்கான அடிப்படை உள்ளது என்றும் தெரிவித்தார். சிற்றுண்டி என்ற சொல் முதன்முதலில் சேந்தன் திவாகரம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிட்ட அவர், பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ள புகழ், வேளாண்மை உலகம் என்பன போன்ற சொற்கள் இன்றளவும் புழக்கத்தில் உள்ளன

என்றும் குறிப்பிட்டார். கலைச்சொல்லாக்கத்தின் போது புலமையைவிட புரிதலுக்கும் எளிமைக்கும் முக்கியத்துவம் தரவேண்டும் என்றும் திரு.உதயச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள் குறிப்பிட்டார்.

ஒருமொழி அகராதியை உருவாக்கிக்கொள்கிறது என்றால் அது தன் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்கிறது என்று பொருள் எனக்கூறிய அவர், நிருவாகம், வழிபாடு, வழக்காடு என அனைத்தும் மக்களுக்குப் புரிகின்றவகையில் தமிழில் இருக்க வேண்டும் என்றும், மக்களுக்குத் தெரியாமல் எதைச் செய்தாலும் நாம் எதையோ மறைக்கின்றோம் என்று பொருளாகும் என்றும் தெரிவித்தால். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 10 சொற்களையாவது படைப்போம் என்று உறுதியேற்றால் தமிழின் சொல்வளம் பெருகி, சொற்குவை வெற்றியடையும் என்றும் தெரிவித்தார்.

## தூய தமிழ்ப் பற்றாளர் பரிசு:

விழாவில், நடைமுறை வாழ்க்கையிலும் தூயதமிழிலேயே பேசுகின்ற

1) **திரு.சி.மணிகண்டன் (கோவை)**
2) **திரு.இரா.அரிதாசு (புதுச்சேரி)**
3) **திரு.த.ஆரோக்கிய ஆலிவர் இராசா (திருச்சி)**

ஆகிய மூவருக்கும் **மாண்புமிகு அமைச்சர்களால் தூயதமிழ்ப்பற்றாளர் சான்றிதழும் தலா ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்பட்டன.**

விழாவின் நிறைவாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு.தங்க.காமராசு அவர்கள் நன்றியுரை கூறினார்.

## பன்னாட்டுக் கருத்தரங்கம்:

முன்னதாக காலையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கத்தைத் **தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் மருத்துவர் சுதாசேஷையன்** அவர்கள் தொடங்கி வைத்தார். வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்கத் தலைவர் செவாலியர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் அவர்கள் தலைமை வகிக்க, அடையாறு மாணவர் நகலகக் குழுமத்தின் நிருவாக இயக்குநர் திரு.சா.அ.சௌரிராசன் அவர்கள் முன்னிலை வகித்தார். கருத்தரங்கில், வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் தி.மு.அப்துல்காதர் அவர்கள், வாழ்வியற் கலைச்சொற்கள் என்ற தலைப்பிலும், சட்டமொழி ஆணைய உறுப்பினர் முனைவர் மு.முத்துவேலு அவர்கள் சட்டச்சொல் அகராதி என்ற தலைப்பிலும், இலயோலா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மேரிசொர்ணாம்பாள் அவர்கள் சங்க இலக்கியங்களில் கலைச்சொற்கள் என்ற தலைப்பிலும், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர் மதன் கார்க்கி அவர்கள்

மின்னகராதி என்ற தலைப்பிலும், யாழ்ப்பாணம் மக்கள் இதழியல் இயக்கத் தலைவர் தேவநாயகம் தேவானந்த் அவர்கள் இதழியல் கலைச்சொற்கள் என்ற தலைப்பிலும், தமிழ்இந்து நாளிதழின் உதவி செய்தி ஆசிரியர் திரு. மானா பாஸ்கரன் அவர்கள் ஊடகத்துறைக் கலைச்சொற்கள் என்ற தலைப்பிலும் கருப்பொருளுரை வழங்கினார்கள். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத் தொகுப்பாளர் திருமதி ஜெ.சாந்தி அவர்கள் நன்றியுரை கூறினார். முற்பகல் நிகழ்வைத் திரு.செ.வ.இராமாநுசன் அவர்களும், பிற்பகல் நிகழ்வை முனைவர் மேரி சொர்ணாம்பாள் அவர்களும் தொகுத்துவழங்கினர்.

## கனடா மேரி இளங்கோவன்:

பிற்பகலில் **கனடா நாட்டைச் சேர்ந்த திருமதி மேரி இளங்கோவன் குழுவினரின் தமிழிசை நாட்டிய நிகழ்ச்சி** நடைபெற்றது. புதுதில்லி குரு கோ.இளங்கோவன் அவர்களின் தமிழிசைக்குக் கனடா நாட்டைச் சேர்ந்த திருமதி மேரி இளங்கோவன் நாட்டியமாடினார். கனடா நாட்டைச் சேர்ந்த திரு கோ.வாசுதேவன் மிருதங்கம் வாசிக்க, சென்னையைச் சேர்ந்த திரு இரா.ஈஸ்வர் வயிலின் வாசித்தார்.

விழாவில் செல்லம்மாள் மகளிர் கல்லூரி, மாநிலக் கல்லூரி, இலயோலா கல்லூரி, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் நிறுவனம், சென்னை மயிலாப்பூர் கமலா இசைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளின் மாணவமாணவியர் கலைநிகழ்ச்சிகளை வழங்கினார்கள்.

சிறப்புமிக்க இவ்விழாவில் அகராதியியல் வல்லுநர்கள்,தமிழறிஞர்கள், தமிழாய்வாளர்கள், கல்வியியல் மற்றும் மருத்துவத்துறை மாணவமாணவியர், பேராசிரியர்கள், ஊடகத்துறையினர் உட்பட பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**